## தலைவர் கலைஞரிடம் கற்றுக்கொண்ட பாடம்



'இவ்வளவு நேரம் ஒரே இடத்தில் உட்கார்ந்திருக்கிறீர்களே, சற்று ஓய்வெடுக்கலாமே' என்று கழகத் தலைமை நிர்வாகிகளும், விருப்பமனு அளித்தவர்களும் தெரிவித்தார்கள். ஓய்வைவிட உழைப்புதான் உற்சாகத்துடன் தொடர்ந்து இயங்கச் செய்கிறது.

உடன்பிறப்புகளின் முகம் பார்த்தே அவர்களின் மன ஓட்டத்தை அறியும் உணர்வை நம் உயிர்நிகர் தலைவர் கற்றுத் தந்திருக்கிறார். நேர்காணலுக்காக அறிவாலயத்திற்கு வந்த உடன்பிறப்புகளைப் பார்த்தபோது, அவர்களுடைய தொகுதிகளைச் சார்ந்த, அறிவாலயம் பக்கமே வந்திராத கழகத்தின் ஆணிவேரான தொண்டர்களின் முகங்களும் என் மனதில் தோன்றின. தலைவர் முதல் தொண்டர் வரை அத்தனை பேரிடமும் ஒரே உணர்வு கொண்ட இயக்கம்தானே நம் திராவிட முன்னேற்றக் கழகம்.

**- முதல்வர் மு.க.ஸ்டாலின்**

## உடன்பிறப்புகளுடன் உற்சாகத்துடன் நேர்காணல்



மார்ச் 17 தொடங்கி, முதல்நாள் புதுச்சேரி, இரண்டாவது நாள் தமிழ்நாட்டின் தென்மாவட்டங்களைச் சேர்ந்த 2,000 உடன்பிறப்புகளையும் 9 மணி நேரத்திற்கும் மேலாகச் சந்தித்து நேர்காணலை நடத்தினேன்.

அறிவாலயத்தில் திரண்டிருந்த உடன்பிறப்புகளின் ஆர்வமும், அவர்களிடம் காணப்பட்ட எழுச்சியும் என் களைப்பை விரட்டி, உற்சாகத்தை அளித்தது.

மூன்றாவது நாள், மேற்கு மாவட்டங்களைச் சேர்ந்த நிர்வாகிகளிடம் 52 தொகுதிகளுக்கான நேர்காணலை நடத்தி முடித்தேன்.

**- முதல்வர் மு.க.ஸ்டாலின்**



கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று(20.3.2026) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், கழக தலைமை நிலைய அலுவலக செயலாளர், தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் தலைவர் துறைமுகம் காஜா, ரம்ஜான் பண்டிகையையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

### தமிழ்நாடு vs டெல்லி என்பது நிரூபணம்!

# எதிர்க்கட்சியினர் டெல்லியில் முகாமிட்டிருப்பது மக்கள் நலனுக்காகவா?

**தேர்தல் களத்தை எதிர்கொள்வதற்கான முடிவுகளைக்கூட டெல்லியே எடுக்கும் நிலை. இனி, டெல்லியின் முடிவே அவர்களது முடிவு!**

## இவர்களிடம் தமிழ்நாடு சிக்கினால் என்ன ஆகும்?




தமிழ்நாடு VS டெல்லி என்பதை முன்வைத்துதான் இந்தத் தேர்தல் களம் என்று நாம் சொல்வதை நிரூபிப்பது போலவே, டெல்லியில் இருந்துதான் எல்லாம் முடிவு செய்யப்படுகிறது.

எதிர்க்கட்சித் தலைவரும் அவரது சகாக்களும் டெல்லியில் இருப்பது எதற்காக? தமிழ்நாட்டிற்கு வழங்கப்படாமல் வஞ்சிக்கப்படும் நிதியை வாங்கித் தருவதற்காகவா? தமிழ்நாட்டில் நிறைவேற்றப்படாமல் முடக்கப்பட்டிருக்கும் திட்டங்களை நிறைவேற்ற வேண்டும் என வலியுறுத்துவதற்காகவா? சமையல் எரிவாயு சிலிண்டர் தட்டுப்பாட்டைப் போக்குவதற்காகவா? இல்லை.. இல்லை.. இல்லவே இல்லை.

தேர்தல் களத்தைச் சந்திப்பதற்கே டெல்லியின் சம்மதம் வேண்டும் என்ற நிலையில் உள்ளவர்களின் கைகளில் தமிழ்நாடு சிக்கிக்கொண்டால் ஒவ்வொரு நாளும் என்ன பாடுபட வேண்டியிருக்கும் என்பதை உணர்ந்துள்ள தமிழ் மக்கள் ஒருபோதும் டெல்லியின் ஆதிக்கத்தையும், அதன் அடிமைக் கூட்டத்தையும் அனுமதிக்க மாட்டார்கள்.

சுயநலனுக்காகச் சொந்தக் கட்சியை அடமானம் வைத்ததுபோல, தமிழ்நாட்டையும் டெல்லியிடம் அடகு வைக்கத் தயங்காதவர்கள் அவர்கள்.

இனி எதிர்க்கட்சியினர் எடுக்கும் முடிவு என்பது டெல்லி எடுக்கும் முடிவுதான்!

**- முதல்வர் மு.க.ஸ்டாலின்**

### அங்கன்வாடி சகோதரிகளுக்கு அலுவலகப் பணிகளுக்காக வழங்கப்பட இருந்த மொபைல் போன்களை

# அவதூறுப் புகார் அளித்து தடுத்து நிறுத்திய அ.தி.மு.க. எம்.பி. இன்பதுரை!

## தமிழ்நாடு அங்கன்வாடிப் பணியாளர் – உதவியாளர்கள் முன்னேற்ற சங்கம் கண்டனம்!

சென்னை, மார்ச். 21-

தமிழ்நாடு அங்கன்வாடி பணியாளர்கள் - உதவியாளர்கள் முன்னேற்ற சங்க பொதுச் செயலாளர் வி.வேலுசுவாமி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

அங்கன்வாடி சகோதரிகள் அவர்களது அன்றாட பணிகளுக்காக மொபைல் போன்களில் உள்ள செயலியையே பயன்படுத்த வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர். இதில் ஒன்றிய அரசு அறிமுகப்படுத்தியுள்ள போஷன் டிராக்கர் செயலியில் தினமும், தங்கள் மையத்தில் பராமரிக்கும் குழந்தைகளின் வருகைப்பதிவு எடை, உயரம், அவர்களுக்கு வழங்குகின்ற முட்டை, சத்து மாவு பாக்கெட்டுகளின் விபரம், வளர் இளம் பெண்கள், கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார்கள், அப்பகுதியில் பிறந்தது முதல் 6 வயது வரையுள்ள குழந்தைகளின் விபரங்கள் மற்றும் வீடுகள் பார்வையிடல் உள்ளிட்ட பல்வேறு தரவுகளை பதிவேற்றம் செய்து வருகின்றனர். அதிலும் தற்போது முக அங்கீகாரம் (FRS) மூலம் பயனாளிகளுக்கு இணை உணவு வழங்குவதற்கு இச்செயலி சரியாக செயல்படாததால் மிகுந்த இன்னலுக்கு ஆளாகியுள்ளனர்.

கடந்த அதிமுக ஆட்சியில் 2018ல் வழங்கப்பட்ட தரம் குறைந்த செல் போன்கள், சீக்கிரமே செயலிழந்து போன நிலையில், சகோதரிகள் தங்களது சொந்த செலவில் செல் போன்களை வாங்கி அலுவலக பணிகளை செய்து வந்த அவலத்தை போக்கும் வகையில் நமது சங்கம் எடுத்த பெரு முயற்சியின் பலனாக 2024ல் 18756 சகோதரிகளுக்கு புதியதாக ஆண்ட் ராய்டு போன்கள் வழங்கப்பட்டன!

ஆனாலும், மீதமுள்ள 29000 சகோதரிகளுக்கு ஆண்ட்ராய்டு போன்களை விரைந்து வழங்கிட வேண்டுமென்று தொடர்ந்து நமது சங்கம் வலியுறுத்தி வந்த நிலையில் ஐ.சி.டி.எஸ் நிர்வாகம் "ஹரியானா ஸ்டேட் எலக்ட்ரானிக் டெவெலப்மெண்ட் கார்ப்பரேஷன் லிமிடெட்" என்ற நிறுவனத்திற்கு 11800/- ரூபாய் விலை மதிப்புள்ள 29 ஆயிரத்து 236 ஆண்ட்ராய்டு போன்களை வழங்குவதற்கு டெண்டர்கள் வழங்கப்பட்டன.

அதனடிப்படையில் புதிய ஆண்ட்ராய்டு செல்போன்கள் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தேவைகளின் அடிப்படையில் பிரித்து வழங்கப்பட்டு வருகின்றன.

இந்த நடவடிக்கையானது, குழந்தைகளின் சேவைகளில் ஈடுபடும் அங்கன்வாடி சகோதரிகளின் அத்தியாவசியப் பணிகள் தடைப்பட்டு விடக்கூடாது என்ற நோக்கில் அரசு செய்து வரும் தொடர் நடவடிக்கை என்பதை அனைவரும் அறிவர்.

ஆனால், தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு அங்கன்வாடி சகோதரிகளுக்கு திராவிட முன்னேற்றக் கழகம் செல்போன்களை பரிசாக வழங்குவது போல சித்தரித்து, அ.தி.மு.க. மாநிலங்களவை உறுப்பினர் இன்பதுரை எம்.பி அவர்கள் தேர்தல் ஆணையத்திடம் புகார் அளித்துள்ளார். அதன் அடிப்படையில் தேர்தல் ஆணையம் சேலம் மாவட்டத்தில் பணியாற்றும் அங்கன்வாடி சகோதரிகளுக்கு வழங்கப்பட இருந்த 2696 மொபைல் போன்கள் வழங்குவதை முடக்கி, ஆட்சியர் அலுவலகத்தில் வைத்துள்ள செய்தி அங்கன்வாடி சகோதரிகளை அதிர்ச்சியில் உறைய வைத்துள்ளது.

அதிமுக ஆட்சி காலத்தில் அங்கன்வாடி சகோதரிகளின் நலன்களுக்கு எந்தவித கோரிக்கைகளையுமே காதில் வாங்க மறுத்ததோடு, அண்மையில் திமுக அரசு அங்கன்வாடி சகோதரிகளுக்காக பல்வேறு புதிய சலுகைகளை அறிவித்து அங்கன்வாடி சகோதரிகளின் மனதில் இடம் பிடித்ததை பொறுத்துக் கொள்ளாமல் அதிமுகவினர் சிலரை தூண்டி விட்டு 16 நாட்கள் வேலை நிறுத்தம் நடைபெற்ற போது அங்கன்வாடி சகோதரிகளின் மீது அக்கறை இருப்பது போல் நாடகமாடியது, இன்பதுரை எம்.பி.யின் செயல் மூலம் அதிமுகவினர் தொழிலாளர் விரோத நடவடிக்கை வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

"அதிமுகவினரால் உபகாரம் இல்லையென்றாலும் பரவாயில்லை ! உபத்திரவம் இல்லாமல் இருந்தால் போதும் என்றே நமக்கு நினைக்கத் தோன்றுகிறது.

அதிமுகவின் இந்த செயல் "குதிரை குப்புறத் தள்ளியதோடு குழியும் தோண்டி விட்டதே" என்ற முதுமொழியை நமக்கு நினைவுப்படுத்துகிறது.

அங்கன்வாடி சகோதரிகளின் கவலைகளை புரிந்து கொள்ளாமல் அவர்களின் பணிச்சுமையை அதிகரிக்கும் வகையில் செல்போன்களை, தனது அவதூறு புகாரின் மூலம் தடுத்துள்ள அதிமுக எம்.பி. இன்பதுரை அவர்களை நமது சங்கத்தின் சார்பில் வன்மையாக கண்டிக்கிறோம். அங்கன்வாடி சகோதரிகள் வரும் சட்டமன்றத் தேர்தலில் அவர்களுக்கு தக்க பாடம் புகட்டுவார்கள்!

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### தமிழ்நாடு தலை குனியாது!

# ஓ.பன்னீர்செல்வம் தேர்தல் பிரச்சாரச் சுற்றுப்பயணம்!



## மாவட்டக் கழகச் செயலாளர் அறிவிப்பு!

| தேதி | நேரம் | தொகுதி | ஒன்றிய/ நகர/ பேரூர் | இடம் |
|---|---|---|---|---|
| மார்ச். 22 | காலை 9.00 மணி | மானாமதுரை (தனி) | இளையான்குடி ஒன்றியம் | எம்.ஜி.எஸ்.மஹால், புதுக்குடி, இளையான்குடி |
| மார்ச்.22 | மாலை 4.00 மணி | சோழவந்தான் (தனி) | மதுரை ஒன்றியம் | சோழவந்தான் |
| மார்ச். 23 | காலை 9.00 மணி | கம்பம் | உத்தமபாளையம் ஒன்றியம் கம்பம் நகரம் | கவிதா தாமோதரன் மண்டபம், சின்னமனூர் |
| மார்ச். 24 | மாலை 4.00 மணி | பெரியகுளம் (தனி) | பெரியகுளம் ஒன்றியம். தேனி நகரம், தென்கரை பேரூர் | தேனி |
| மார்ச்.24 | இரவு 7.00 மணி | போடிநாயக்கனூர் | சின்னமனூர், தேனி ஆகிய ஒன்றியங்கள் பழனிசெட்டிபட்டி, பூதிப்புரம், மார்கேயன்கோட்டை ஆகிய பேரூர்கள் | போடிநாயக்கனூர் |

**சிவகங்கை மாவட்டச் செயலாளர் கே.ஆர்.பெரியகருப்பன், மதுரை வடக்கு மாவட்டச் செயலாளர் பி.மூர்த்தி, தேனி வடக்கு மாவட்டச் செயலாளர் தங்க.தமிழ்ச்செல்வன், தேனி தெற்கு மாவட்டச் செயலாளர் கம்பம் நா.இராமகிருஷ்ணன் ஆகியோர் அறிவித்துள்ளனர்.**



சென்னை கிழக்கு மாவட்டம் துறைமுகம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட துறைமுகம் கிழக்கு பகுதி நிர்வாகிகள் BLA2, BDA, BYO ஆலோசனைக்கூட்டம் நேற்று (20.03.2026) அன்னை பார்ட்டி ஹாலில் நடைபெற்ற கூட்டத்தில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சென்னை கிழக்கு மாவட்ட கழகச் செயலாளர் பி.கே.சேகர் பாபு ஆலோசனை வழங்கி சிறப்புரையாற்றினார். இக்கூட்டத்தில் மேயர் பிரியா ராஜன், பகுதி கழகச் செயலாளர் எஸ்.ராஜசேகர், இரா.நரேந்திரன், எம்.விஜயகுமார், ஜி.எம்.தேவன், இப்ராஹிம் கனி, மற்றும் BLA2,BDA,BYO ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



பல்லாவரம் சட்டமன்றத் தொகுதியில் வாக்குச்சாவடி நிலை முகவர்கள் (BLA2) ஆலோசனைக் கூட்டம் மாவட்ட கழகத் துணைச் செயலாளர் இ.கருணாநிதி எம்எல்ஏ தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளர் – அமைச்சர் தா.மோ.அன்பரசன் ஆலோசனைகள் வழங்கினார். தாம்பரம் மாநகரச் செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ., மேயர் க.வசந்தகுமாரி, துணை மேயர் கோ.காமராஜ், மண்டல தலைவர்கள் வே. கருணாநிதி, இ.ஜோசப் அண்ணாதுரை, பகுதி கழகச் செயலாளர்கள் த.ஜெயக்குமார், இ.எஸ். பெர்னாட், ஏ.கே.கருணாகரன், ஒன்றிய செயலாளர் ஜி.கே.ரவி, தகவல் தொழில்நுட்ப செயலாளர் அ.தமிழ்மாறன், பொதுக்குழு உறுப்பினர் மு.ரஞ்சன், மாநகரத் துணைச் செயலாளர் இரா.நரேஷ் கண்ணா, தகவல் தொழில்நுட்ப மாவட்ட ஒருங்கிணைப்பாளர் வி.ரவிச்சந்திரன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் கோ.ஜானகிராமன், வீ.தினேஷ், மாநகர இளைஞரணி அமைப்பாளர் பி.கே.ஏ.சத்தியபிரபு, பகுதி நிர்வாகிகள், வட்டக் கழக செயலாளர்கள், வாக்குச்சாவடி நிலை முகவர்கள் பூத் ஒருங்கிணைப்பாளர்கள், வாக்குச்சாவடி சமூக தளமுகவர்கள் ஆகியோர் கலந்து கொண்டு கூட்டத்தை சிறப்பித்தார்கள்.